# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnercmail@gmail.com Web site : www. tneo.gov.in

**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 31/2015**

திரு. அர. ஏழுமலை,
த/பெ அ. ரங்கசாமி,
கன்னியம்மன் கோயில் தெரு,
மேட்டுக்காடு,
சட்டமங்கலம் கிராமம்,
மறைமலை நகர், காஞ்சிபுரம் மாவட்டம். ........மேல் முறையீட்டாளர்
(திரு. அர. ஏழுமலை)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
130, ஜி.எஸ்.டி ரோடு,
செங்கல்பட்டு – 603 001

......... எதிர்மனுதாரர்
(திருமதி.A.S. மாலாஸ்ரீ, செயற்பொறியாளர்/மறைமலைநகர்)

**கேட்புரை நாள்: 4–6–2015 & 9–7–2015**

**ஆணை நாள் : 29–7–2015**

திரு. அர. ஏழுமலை, மேட்டுக்காடு, சட்டமங்கலம் கிராமம் அவர்களின் 22.3.2015 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.31/2015 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது 4–6–2015 மற்றும் 9.7.2015 ஆகிய நாட்களில் மின் குறைதீர்ப்பாளர் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது. மேல் முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர் மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள், கேட்புரையின் பொழுது இருதரப்பினராலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின் குறைதீர்ப்பாளரால் கீழ் கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

## 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :

திரு. சீத்தாராமன் அவர்களுக்கு சர்வே எண்.258/12B–இல் கொடுக்கப்பட்ட மின் இணைப்பு எண். 572–008–929 தவறான ஆவணங்கள் பெறப்பட்டு வழங்கப்பட்டுள்ளது என்பதால் அந்த மின் இணைப்பின் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனறு கோரியுள்ளார்.

## 2. வழக்கின் சுருக்கம்:

2.1 திரு. சீத்தாராமன் அவர்களின் பெயரில் சர்வே எண்.258/12B என்ற இடத்திலுள்ள வீட்டிற்கு மின் இணைப்பு எண்.572–008–929 வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மின் இணைப்பு திருப்போரூர் பிரிவு அலுவலகத்தின் ஆளுகைக்கு உட்பட்டது.

2.2 திரு. அர. ஏழுமலை, மறைமலை நகர் அவர்கள் திரு. சீத்தாராமன் அவர்களுக்கு வழங்கிய மின்னிணைப்பு எண்.572–008–929 தவறானஆவணங்கள் பெறப்பட்டு வழங்கப்பட்டுள்ளதால் அந்த மின் இணைப்பின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தன்னுடைய 17.1.2015 நாளிட்ட மனுவை செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு சமர்ப்பித்துள்ளார். மன்றம் தன்னுடைய ஆணையை 21.2.2015 அன்று வழங்கியுள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“மனுதாரர் கூறிய கருத்துக்களையும் வாரிய தரப்பால்கூறிய கருத்துக்களையும் விண்ணப்பதாரர் மின் இணைப்பு பெறுவதற்கு அளித்த ஆவணங்களை பரிசீலித்ததில் திரு. சீத்தாராமன் அவர்கள் குடியிருக்கும் வீட்டிற்கு அவர் அளித்த ஆவணங்களின் அடிப்படையில் வாரிய விதிப்படியே மின் இணைப்பு கொடுக்கப்ட்டுள்ளது. மேலும், மனுதாரர் தரப்பில் கூறும் கருத்துக்களான திரு. சீத்தாராமன் அவர்கள் கட்டியிருக்கும் வீடு அவருடைய மனைவிக்கும்அவருக்கும் சொந்தமான இடத்தில் வீடு கட்டி மின் இணைப்பு பெறப்பட்டுள்ளதாகவும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ள இடம் அவரது மனைவிக்கு சொந்தமான இடம் என்றும் தெரிவித்துள்ள நிலையில் மின் இணைப்பு பெறுவதற்கு முன்*

*மனுதாரர் அளித்தாக தெரிவிக்கப்படும் ஆடசேபணையில் இவருக்கு எந்த வித முகாந்தரமும் இலலாததால் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.*

*மேலும், மனுதாரர் தெரிவிப்பது போல் அவ்விடம் கூட்டுப்பட்டாவாக இருப்பதாகவும் தனித்தனியாக பிரிக்கும்போது திரு. சீத்தாராமன் இடமும் இவருக்கு வரலாம் என்று ஐயப்பாடு தெரிவிப்பதினால் மனுதாரர் வருவாய் துறையை அணுகி உரிய ஆவணங்கள் பெற்று திரு. சீத்தாராமன் மின் இணைப்பு பெற்றிருக்கும் இடம் இவருக்கு சொந்தமானது என்று தெரிவிக்கும் பட்சத்தில் வாரிய விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்க இந்த மன்றம் உத்தரவிடுகிறது.''*

2.3 மேற்கண்ட ஆணையில் திருப்தியில்லாததால் மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை, மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

3. <u>மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்கள்</u>

3.1 சர்வே எண்.258/12ல் ஆவணங்களை நன்கு ஆய்வு செய்து மின்இணைப்பு வழங்கிடவேண்டும் , பிழையான ஆவணங்களுக்கு மின் இணைப்பு வழங்கிட வேண்டாம் என 6.4.2013 அன்று உதவி மின் பொறியாளர், திருப்போரூர் அவர்களுக்கு மனு செய்யப்பட்டுள்ளது.

3.2 சர்வே எண்.258/12ல் மின் இணைப்பு கொடுத்திட்டுள்ளார்களா என்பதை அறிந்திட 19.7.2013 அன்றுதகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி விண்ணப்பித்திட்டபோது 14.8.2013 நாளிட்ட பதில் கடிதத்தில் மின் இணைப்பு வழங்கப்படவில்லை என கடிதம் கிடைத்திட்டது மீண்டும் 17.10.2013 அன்று விண்ணப்பித்திட்டபோது தெளிவான கடித எண்ணும் தேதியும் குறிப்பிடாத கடிதத்தில் சீத்தாராமன் த/பெ வைரவன் SF No258/12Bயில் வீட்டு வரி ரசீது பத்திர நகல் பெற்று சரிபார்த்து மின் இணைப்பு 572/008/929 வழங்கியதாகவம் குறிப்பிட்டுள்ள கடிதமும் பத்திரம் மற்றும் வரி ரசீது நகலும் பெறப்பட்டது.

3.3 மறைமலை நகர் செயற்பொறியாளர், அவர்களிடம் 21.7.2014ல் மின் இணைப்பு கொடுத்திட்ட இடத்தினை பார்வையிடவேண்டியும் உரிய விசாரணை செய்ய வேண்டியும் மனு கொடுத்திட்டு கிடைத்திட்டபதிலில் மீண்டும் சர்வே எண்.SF No.258/12B மின்இணைப்பு வழங்கியதாகவும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி அளித்திடாத கிராம நிர்வாக அலுவலர் சான்று (புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது) முன்வைத்திட்டு இடத்தினை பார்வையிட்டு மின் இணைப்பு வழங்கியதாகவும் கூட்டுபட்டா குறித்து நகல்கள் பெறவில்லை எனவும் பிழையான ஆவணத்திற்கு மின் வாரியம் பொறுப்பல்ல நீதிமன்ற உத்திரவு கிடைத்திட்டவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டபடி உத்திரவு பெறவில்லை.

3.4 மனுவில் குறிப்பிட்டுள்ளபடி நடவடிக்கை எடுத்திடாததற்காக மக்களுக்காக நடத்திடப்படும் மக்கள் குறைதீர்க்கும் நாளான 10.9.2014, 8.10.2014, 12.11.2014, 10.12.2014 ஆகிய தேதிகளில் மனு செய்யப்பட்டுள்ளது. அம்னுவிற்கான பதில் கிடைத்திடவில்லை.

3.5 தலைவர் அவர்கள் முதன் முதலாக எடுத்துரைத்தது முகாந்திரம் இல்லாத கடிதம் என்கின்ற வார்த்தைக்கு முக்கியத்துவம் அளித்திட்டு பேசப்பட்டது மற்றும் நேரம் வீணாகின்றது எனவும் பேசப்பட்டது. உரிய நகல்களை காண்பித்திட்டபோதும் பார்க்கபடாமல் மன்றத்தில் எடுத்துரைத்திட்டதையும் ஏற்காமல் பேசப்பட்டு மன்றம் முடிவுற்றது.

3.6 மின் இணைப்பு அளித்திடுவதற்காக சீத்தாராமன் பத்திர நகலில் சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.258/12ற்கான இடத்திற்கும் புல எண். திருத்தம் செய்யப்பட்ட வரி ரசீது ஆகிய நகல்களை பெற்றிட்டு செயற்பொறியாளர் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.258/12பியில் கொடுத்திட வேணடிய மின் இணைப்பினை தனிபத்திரம் கொண்ட இடத்தில் அவ்விடத்தின் உரிமையாளர் அனுமதி பெற்றிடாமல் மின் இணைப்பு 572/008/929 எதற்காக மாற்றிகொடுத்திட்டுள்ளது. தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி சர்வே எண்.258/12பி க்கான பத்திர நகலோ அல்லது வரி ரசீதும் பெறப்படவில்லை என்பதால் தங்களின் ஆவண கள ஆய்வு தேவையாகும்.

3.7 சர்வே எண்.258/12ல் திரு. ரத்தினம் பெயரில் மின் இணைப்பு எண்.572/008/225, கிராம நிர்வாக அலுவலர் சான்று பெற்று கொடுத்திட்டுள்ளது. சர்வே எண்.258/12ல் திரு. தாமோதரன் பெயரில் மின் இணைப்பு எண்.572/008/577 கிராம நிர்வாக அலுவலர் சான்றும் வரி ரசீதும் பெற்று கொடுத்திட்டுள்ளது. தற்போது 258/12எ சர்வே எண்ணில் அத்துபிரிபடாத பாகமாக 28.7.2011ல் பத்திர பதிவு செய்கின்றார். சர்வே எண்.258/12ல் திரு. மோகன் பெயரில் மின் இணைப்பு எண்.572/008/688 பத்திர பதிவு நகல் மற்றும் வரி ரசீது பெற்று மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. சர்வே எண். 258/12ல் திரு. சீத்தாராமன் பெயரில் மின் இணைப்பு எண்.572/008/929 பத்திரபதிவு நகல் மற்றும் வரி ரசீது பெற்று மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

3.8 சர்வே எண்.258/12 பிளவுபடாமல் பத்திரபதிவு செய்யப்பட்டுள்ளது. முறையாக பிளவுபடாத கூட்டுபட்டா என நிரூபிக்கும் சர்வே எண்.258/12 புதிய சர்வே எண்ணாக 258/12B என பத்திரபதிவு செய்யப்பட்டுள்ளது.

3.9 செயற்பொறியாளர்/மறைமலைநகர் அவர்களின் கடிதஎண்.423/2011 நாள் 26.9.2011 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஆய்வுசெய்ய உரிய வட்டாட்சியருக்கு எதற்காக ஆவணங்களை ஆய்வுக்கு அனுப்பி வைக்கவில்லை மற்றும் 757/2014 நாள் 18.8.2014 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி பிழையான சொல்லுக்கு மின் வாரியம் பொறுப்பல்ல நடவடிக்கை

எடுத்திடுவதற்கு நீதிமன்றத்திற்குதான் அதிகாரம் உள்ளது என குறிப்பட்டுள்ளபடி பெற்றிட்ட ஆவணம் உண்மையென நிரூபிக்க நீதிமன்றத்தில் முறையிடாமல் நீதிமன்ற உத்திரவு கிடைத்திட்டவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டுள்ளபடி நீதிமன்றத்தில் முறையிடவில்லை. ஆகையால் அவ்விடத்திற்கான பட்டா நகல்களை ஆய்வு செய்ய உத்திரவிடவேண்டும். வழங்கப்பட்ட வரி ரசீது எந்த ஆதார ஆவணத்தினை முன்வைத்திட்டு வரிவிதிக்கப்பட்டது பற்றி உரிய அலுவலகத்திற்கு அனுப்பி ஆய்வு நடத்திட வேண்டும். மற்றும் மின் இணைப்பு கொடுக்கப்பட்ட சம்பந்தப்பட்ட இடத்தினை நேரடி ஆய்வு செய்யவேண்டும்.

3.10 ஒரே சர்வே எண். இத்தனை நபர்கள் பெயரில் பதிவாகிறது அந்த இடம் கூட்டுபட்டா இடமா அல்லது தனிநபர் குடும்பத்திற்கான இடமா என்பதற்கான தங்களின் பதிலும் 6.4.2013ல் மனுசெய்தபோது இணைத்து அளித்திட்ட பட்டா ஆவணம் பொய்யானது என்றும் அப்பட்டா ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண். ஒரு நபருக்கு உரியது இப்பத்திரத்தின் சொத்துவிவரத்தில் குறிக்கப்பட்டுள்ளபடி மற்றவர்கள் கையொப்பம் இடதேவையில்லை இதுபான்ற ஆவணங்கள் பெற்று மின் இணைப்பு அளித்திட்டதில் தவறுகள் காணப்படவில்லை என சான்றளித்திடவேண்டும் ஆய்வு செய்த பின் தவறு என அறிந்திட்டால் வழங்கிட்ட மின் இணைப்புகள் மீதும் மக்கள் குறைதீர்க்கும் நாளில் அளித்திட்ட மனுவிற்கு பதில் அளித்திடாத மக்கள் குறைதீர்ப்பாளர் மீது மன்ற விதியின்படியும் காலம் கடந்து பதில் அளித்திட்ட பொறியாளர் மீது உரிய நடவடிக்கையும் எடுத்திட்டு சம்பந்தப்பட்ட துறைக்கு பரிந்துரை செய்து இணைக்கப்பட்ட நகல்களை ஆய்வு செய்து உரிய தீர்வு வழங்கிடவேண்டும்.

## 4. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u>

4.1 திரு. சீத்தாராமன் த/பெ வைரவன் அவர்கள் பெயரில் முறையாக விண்ணப்பம் 16.9.2013ல் பெறப்பட்டு வாரிய விதிப்படி மின்இணைப்பு 19.9.2013 அன்று வழங்கப்பட்டுள்ளது மின் இணைப்பு எண்.572–008–929.

4.2 19.7.2013 தேதியிட்ட மனுதாரரின் மனுவிற்கு 14.8.2013 அன்று பதில் கடிதம் அனுப்பப்பட்டது. அதன் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், 17.10.2013தேதியிட்ட மனுதாரரின் மனுவிற்கு 8.11.2013 அன்று பதில் கடிதம் அனுப்பப்பட்டது.

4.3 10.9.2014 தேதியிட்ட மனுவிற்கான பதில்கடிதம் பெறப்படவில்லை என்று 8.10.2014 தேதியிட்ட மனுவில் மனுதாரர் தெரிவித்துள்ளார். ஆனால், 25.8.2014 தேதியிட்ட மனுதாரரின் புகார் மனு மற்றும் 10.9.2014 அன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாளில் பெறப்பட்ட

மனுதாரரின் மனுவிற்கு 11.11.2014 தேதியிட்ட பதில் கடிதம் 12.11.2014 அன்று மனுதாரரிடம் நேரடியாக வழங்கப்பட்டது.

4.4 17.1.2015 தேதியிட்ட மனுதாரரின் மக்கள் குறைதீர்க்கும் மன்றத்தின் மூலம்பெறப்பட்ட மனுவிற்கு 21.2.2015 அன்று மக்கள் குறைதீர்க்கும் மன்றத்தின் மூலம் விவாதிக்கப்பட்டு பதில் கடிதம் அனுப்பப்பட்டது.

4.5 சர்வே எண்.258/12ல் திரு. ரத்தினம் பெயரில் வழங்கப்பட்ட மின் இணைப்பு (572–008–225) எண்ணும், திரு. மோகன் பெயரில் வழங்கப்பட்ட மின் இணைப்பு (572–008–688) எண்ணும், திரு. சீத்தாராமன் பெயரில் வழங்கப்பட்ட மின் இணைப்பு எண்.,572–008–929) எண்ணும் முறையான ஆவணங்களின் அடிப்படையிலேயே மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

4.6 தமிழ்நாடு ஒழுங்குமறை ஆணையத்தின்படி மின் இணைப்பு கோரும் மின் நுகர்வோர் அவர்களுக்குச் சொந்தமான இடம் என்பதற்கான உரிமைச் சான்றுகளை சமர்ப்பிக்கும் பட்சத்தில் மின் இணைப்புகள் வழங்கப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

## 5. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

5.1 மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகிய இருவரும் தங்களுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைப்பதற்கு வசதியாக 4–6–2015 மற்றும் 9.7.2015 ஆகிய நாட்களில் மின்குறைதீர்ப்பாளரால் கேட்புரை நடத்தப்பட்டது.

5.2 மேல்முறையீட்டாளர்,இருதினங்களிலும் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

5.3 எதிர்மனுதாரர் சார்பில் திருமதி. A.S. மாலாஸ்ரீ, செயற்பொறியாளர்/மறைமலைநகர் அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

## 6. <u>மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி கேட்புரையின் பொழுது எடுத்துரைத்த வாதங்கள்</u>

6.1 மேல்முறையீட்டாளர் திரு. அர. ஏழுமலை அவர்கள் கேட்புரை நடந்த இரண்டு நாளிலும் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

6.2 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்துவதாக தெரிவித்தார்.

6.3 மேல்முறையீட்டாளர் 258/12 என்ற சர்வே எண்ணிலுள்ள நிலம், 17 நபர்களுக்கு சொந்தமானது என்றும்,அந்த 17 பேருக்குள்ளும் பாகப்பிரிவினை ஏற்படுத்தப்படவில்லை என்றும் எனவே, ஒரு பிரிக்கப்படாத சொத்தில் ஒரு உரிமையாளரிடமிருந்து வாங்கப்பட்ட நிலத்தின் விற்பனை பத்திரத்தை (sale deed) ஆதாரமாக கொண்டு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு பிரிக்கப்படாத நிலத்தில் ஒரு உரிமையாளர் தன்னுடைய பகுதி எது என்று கூறமுடியாத நிலையில் அந்த விற்பனை பத்திரத்தை ஆவணமாக ஏற்று மின் இணைப்பு வழங்கியது தவறு என்று வாதிட்டார்.

6.4 திரு. சீத்தாராமன் மின்இணைப்பு கேட்டு விண்ணப்பித்த பத்திரத்திலுள்ள சர்வே எண். 258/12பி ஆகும். ஆனால் அந்த இடம் அவருக்கு உரிமை என்பதற்கு அவர் சமர்ப்பித்துள்ள வீட்டு வரி ரசீது மற்றும் விற்பனை பத்திரம் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்.258/12 ஆகும். விண்ணப்பத்திலுள்ள சர்வே எண்படி உரிமை சான்று இல்லை. எனவே, மின இணைப்பு தவறான ஆவணங்களை ஆதாரமாக கொண்டு வழங்கப்பட்டுள்ளது அதனால் அந்த மின் இணைப்பு வழங்கல் தவறு என்று வாதிட்டார்.

6.5 மின் இணைப்பு வழங்கப்பட்ட வீடு, திரு. சீத்தாராமன் மற்றும் அவரது மனைவிக்கு சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ளது. ஆனால், அவரின் மனைவியின் பெயரில் கூட்டு விண்ணப்பம்இல்லை, மனைவியின் சம்மதகடிதமும் இல்லை. எனவே, மின் இணைப்பு வழங்கியதில் தவறு உள்ளது என்று வாதிட்டார்.

6.6 தன்னுடைய ஆட்சேபனையை 6.4.2013ல் தெரிவித்தும், மின் இணைப்பு திரு. சீத்தாராமன் என்பவரின் பெயரில் 19.9.2013ல் வழங்கப்பட்டுள்ளது. தன்னுடைய ஆட்சேபனையை கணக்கில் கொள்ள வில்லை என்றும் வாதிட்டார்.

6.7 மின்சார இணைப்பு கோரும் விண்ணப்பத்தில் தெரியப்படுத்தப்பட்டுள்ள சர்வே எண்ணிற்கும் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள வீட்டு வரி ரசீதிலுள்ள சர்வே எண்ணும் வேறுபட்டுள்ளதால் கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று வாங்கப்பட்டுள்ளது என்று

தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு கிராம அலுவலரின் சான்று பெறலாம் என்று ஏதேனும் விதிகள் அல்லது ஆணைகள் உள்ளனவா என்றும் கேள்வி எழுப்பினார்.

6.8 மேலும், மேல்முறையீட்டாளர் வருவாய்துறை ஆவணங்கள் என்பது வட்டாட்சியர் அளவில்தரப்படும் ஆவணங்கள்தான் எடுத்துக் கொள்ளப்படும் என்று செயற்பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், கிராம நிர்வாக அலுவலரின் சான்று இந்த வழக்கில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, செயற்பொறியாளரின் அறிவிப்பிற்கும், நிகழ்விற்கும் முரண்பாடு உள்ளது என்றும் வாதிட்டார்.

## 7.0 <u>எதிர்மனுதாரரின் பிரதிநிதி கேட்புரையின் பொழுது எடுத்துரைத்த வாதங்கள்:</u>

7.1 எதிர்மனுதாரர் சார்பில் திருமதி. A.S. மாலாஸ்ரீ, செயற் பொறியாளர் / மறைமலைநகர் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

7.2 செயற்பொறியாளர்/மறைமலைநகர் அவர்கள் ஒரு மின்னிணைப்பை வழங்குவதற்கு அந்த இடத்தின் உரிமைதாரர் மின் இணைப்பு கோரினால் விற்பனை பத்திரம் அல்லது வீட்டு வரி/கழிவு நீர் வரி ஆகிய ரசீதுகளை சமர்ப்பித்தால் மின் இணைப்பு வழங்கலாம் என்று விதி உள்ளது என்று தெரிவித்தார்.

7.3 மேலும், திரு. சீத்தாராமன் அவர்கள், தன்னுடைய 258/12பி என்ற சர்வே எண்ணிலுள்ள வீட்டிற்கு மின் இணைப்பு கேட்டு விண்ணப்பித்திருந்ததாகவும் வீட்டின் உரிமைக்கு ஆவணமாக விற்பனை பத்திரம் மற்றும் வீட்டு வரி ரசீது ஆகியவற்றை சமர்ப்பித்திருந்தார்கள் என்றும் ஆனால் அவற்றில் சர்வே எண். 258/12 என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால் அந்த வீடு உள்ள இடம் 258/12பி என்று கிராம நிர்வாக அலுவலரின் சான்று பெற்று மின் இணைப்பு வழங்கப்பட்டது என்று தெரிவித்து அந்த ஆவணங்களின் நகல்களையும் அளித்தார்.

7.4 வீட்டு வரி ரசீதில் தெரு பெயர் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த வீடுதான் வீட்டு வரி ரசீதில் சர்வே எண்.258/12 என்று விற்பனை பத்திரத்திலுள்ள பிரிக்கப்படாத சர்வே எண். போடப்பட்டுள்ளது என்றும் ஆனால் அந்த சர்வே எண்.258/12பி என்று பிரிக்கப்பட்டுவிட்டது

என்று சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் சான்று அளித்ததால் அது ஏற்றுக் கொள்ளப்பட்டது என்றும் வாதிட்டார்.

7.5 வீடு கட்டியிருக்கும் இடம், திரு. சீத்தாராமன் மற்றும் அவரின் மனைவிக்கும் சொந்தம் என்று மேல்முறையீட்டாளர் தற்பொழுது வாதிடுகிறார் ஆனால், ஆதாரம் எதுவும் கொடுக்கவில்லை. ஆனால, வீட்டு வரி ரசீது திரு. சீத்தாராமன் பெயரில் மட்டும்தான் உள்ளது. எனவே, மின் இணைப்பு திரு. சீத்தாராமன் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்று வாதிட்டார்.

7.6 மேல்முறையீட்டாளர் தன்னுடைய ஆட்சேபனை கடிதத்தில் ஆவணங்கள் ஆய்வு செய்து மின் இணைப்பு கொடுக்க மறுப்பு தெரிவிக்கவில்லை என்று தெரிவித்துள்ளார். மின் இணைப்பு கோரி கொடுக்கப்பட்ட விண்ணபத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியாக உள்ளது என்பதால் மின் இணைப்பு வழங்கப்பட்டது என்று வாதிட்டார்.

7.7 மேலும், ஆட்சேபனை இருந்ததால் மின் இணைப்பு தவறாக கொடுக்கப்பட்டுள்ளது என்று பின் வரும் காலத்தில் அறிந்தால் மின் இணைப்பை துண்டிக்க நேர்ந்தால் நுகர்வோர் அதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன் என்று ஒப்புதல் கடிதம் பெறப்பட்டுள்ளது என்றும் மேல்முறையீட்டாளர் அந்த இடத்தின் உரிமையாளர் என்று நீதிமன்ற உத்தரவு பெற்று தந்தால் அந்த மின் இணைப்பு மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## 8. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

8.1 மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள், இருதரப்பினராலும், கேட்புரையின் பொழுது எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து பார்க்கும் பொழுது கீழ் கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக உள்ளன

(1) ஒரு வீட்டிற்கு மின் இணைப்பு வழங்க தேவைப்படும் ஆவணங்கள் யாவை ?

(2) திரு. சீத்தாராமன் பெயரில் வழங்கிய மின் இணைப்பை மின் துண்டிப்பு செய்ய வேண்டும் என்ற மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதா ?

9. <u>**வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு :–**</u>

**9.1** ஒரு வீட்டிற்கு புதிய மின் இணைப்பை வழங்குவதற்கு தேவைப்படும் ஆவணங்கள் எவை, என்பதை தெரிந்து கொள்ள நாம் தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி27(3) ஆராய வேண்டும். இந்த மின் இணைப்பு 19.9.2014 ல் வழங்கியுள்ளதால் அந்த சமயத்திலிருந்த விதியை தான் ஆராய வேண்டும். அந்த விதி 27(3) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"(3) The application for HT supply shall be in Form 4. Application for LT supply ( except Agricultural category) including Hut service shall be in Form 1 & 3 of Annexure III.*

**9.2** மேலும், ஒழுங்குமுறை ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட தாழ்வழுத்த மின் இணைப்பு கோரும் விண்ணப்பத்தின் படிவம் தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் இணைப்பில் உள்ளவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*FORM I*

*Application Form for L.T. Service connection (except Agriculture and Hut)*

*FORM OF REQUISITION FOR SUPPLY OF LOW TENSION ENERGY ( SINGLE PHASE / THREE PHASE) [Refer clause 27(3)*

*To*

*The Designated Engineer*
*(Address of the Licensee)*

*Sir,*

1. *xxx xxx xxxx xxxxx xxxx*
   *xxx xxx xxxx xxxxx xxxx*
2. *xxx xxx xxxx xxxxx xxxx*
3. *xxx xxx xxxx xxxxx xxxx*
4. *xxx xxx xxxx xxxxx xxxx*
5. *xxx xxx xxxx xxxxx xxxx*
6. *xxx xxx xxxx xxxxx xxxx*
7. *xxx xxx xxxx xxxxx xxxx*
8. *xxx xxx xxxx xxxxx xxxx*
9. *xxx xxx xxxx xxxxx xxxx*
10. *xxx xxx xxxx xxxxx xxxx*

*Signature of the Consumer*

***Note : The application shall be accompanied with the following documents:***

***(i) Proof of ownership (sale deed or property / water / sewerage tax receipt)***

***(ii) Consent letter from owner wherever applicable***

*FOR LICENSEE'S USE ONLY*

*Application registered as No.* *dated*

*xxxx xxxxx xxxxx xxxxxx*

*xxxxx xxxxx xxxxx xxxxxx*
*xxx xxx xxxx xxxxx xxxx*

*PRECAUTION TO BE ADOPTED BY CONSUMERS, OWNERS, ELECTRICAL CONTRACTORS, ELECTRICAL WORKMEN, AND OTHER SUPPLIERS OF ENERGY*

*No electrical installation work, including additions, alterations, repairs and adjustments to existing installations except such replacement of lamps, fans, fuses, switches and other component parts of the installations as in no way alter its capacity or character shall be carried out upon the premises or on behalf of any consumer or owner for the purpose of the supply of energy to such consumer or owner, except by an authorized person specified by the Authority. "*

**9.3** மேற்கண்ட 27(3)இன்படி விவசாயம் தவிர்த்த ஒரு தாழ்வழுத்த மின் இணைப்பு கோரும் விண்ணப்பங்கள் படிவம் 1இன்படி இருக்க வேண்டும் என்று தெரிகிறது.

**9.4** மேலும், ஒழுங்குமுறை ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட அந்த விண்ணப்ப படிவத்தில் கீழ்கண்ட ஆவணங்கள் இணைக்கப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

(i) உரிமை சான்று (விற்பனை பத்திரம் அல்லது சொத்து /தண்ணீர்/வடிகால் வரியின் பற்று சீட்டு)

(ii) உரிமையாளரது சம்மதக்கடிதம் தேவைப்பட்டால்

**9.5** மேற்கண்ட விதியின்படி ஒரு வீட்டிற்கு மின் இணைப்பை பெற வேண்டும் என்றால் உரிமையாளர் படிவம் 1இன்படி உள்ள மின் இணைப்பு கோரும் விண்ணப்பத்துடன் அந்த வீட்டின் உரிமை சான்று அதாவது விற்பனை பத்திரம் அல்லது சொத்துவரி பற்றுசீட்டு அல்லது தண்ணீர் வரி பற்று சீட்டு அல்லது வடிகால் வரியின் பற்று சீட்டு ஆகியவற்றில் ஏதேனும் ஒரு ஆவணத்தை சமர்ப்பிக்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது. மேலும், வீட்டின் உரிமையாளரை தவிர மற்றவர் பெயரில் மின் இணைப்பு கோரினால் உரிமையாளரது சம்மதக்கடிதம் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று தெரிகிறது. இந்த வழக்கில் உரிமையாளர் தான் மின் இணைப்பு கேட்பதால் உரிமையாளரது சம்மதக் கடிதம் தேவையில்லை.

**10. <u>வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு</u>**

**10.1** திரு. சீத்தாராமன் பெயரில் மின் இணைப்பு கோரிய விண்ணப்பத்திலுள்ள சர்வே எண்.258/12பி அதன் உரிமையாளர் என்பதற்கு ஆதாரமாக கொடுக்கப்பட்டுள்ள ஆவணங்களிள்ள சர்வே எண்.258/12. எனவே, ஆவணங்கள் சரியாக இல்லை என்பதால் அந்த மின் இணைப்பு வழங்கியது தவறு என்று மேல்முறையீட்டாளர் வாதிட்டுள்ளார்.

10.2 மேல்முறையீட்டாளர் சர்வே எண்.258/12 என்பது 17 பேருக்கு உரிமையான பிரிக்கப்படாத இடமாகும். எனவே, அதில் ஒவ்வொருவருக்கும் உள்ள பாகம் எது என்பது வரையறுக்கப்படவில்லை. அவ்வாறு வரையறுக்கப்படாத நிலத்தின் பங்குதாரர் தன்னுடைய பாகம் இதுதான் என்று குறிப்பிட்டு எவ்வாறு விற்பனை செய்யமுடியும் என்றும் வாதுரை புரிந்தார். மேலும், இது சம்பந்தமாக தன்னுடைய ஆட்சேபனையை தெரிவித்தும் அதை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் அது தவறு என்றும் வாதிட்டார்.

10.3 சர்வே எண் மாற்றம் இருக்கும்பொழுது அந்த விண்ணப்பத்தை தள்ளுபடி செய்யாமல் கிராம நிர்வாக அலுவலரின் சான்றுபெற்று மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இது தமிழ்நாடு மின்சார பகிர்மான விதிகளில் கூறப்பட்டுள்ள ஆவணங்களின்படி இல்லை என்றும், வருவாய்த்துறை அதிகாரியின் விளக்கம் (clarification) வேண்டுமென்றால் ஏற்கனவே செயற்பொறியாளர், தனக்கு தெரிவித்தது போல் வட்ட ஆட்சியரிடம் தான் விளக்கம் (clarification) பெற்று மின் இணைப்பு வழங்கியிருக்க வேண்டும் என்று வாதிட்டார்.

10.4 மேலும், மின் இணைப்பு வழங்கப்பட்ட வீடு, திரு.சீத்தாராமன் மற்றும் அவர் மனைவி இருவருக்கும் சொந்தமான இடத்திலுள்ளது ஆனால், மின் இணைப்பு திரு. சீத்தாராமன் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

10.5 எதிர்மனுதாரர் சார்பில் கலந்துகொண்ட செயற்பொறியாளர்/மறைமலைநகர் திருமதி. மாலாஸ்ரீ அவர்கள் விண்ணப்பத்தில் 258/12பி என்ற சர்வே எண்ணும் அத்துடன் இணைத்துள்ள சொத்தின் உரிமையாளர் என்ற வரி விதிப்பு ரசீதில் 258/12 என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் சர்வே எண். மாற்றம் என்பதால் வருவாய்த்துறை அதிகாரிகளால்தான் விளக்கம் சரியாக தரமுடியும் என்பதால் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று பெறப்பட்டது என்று வாதிட்டார். மேலும், இந்த வழக்கில் ஒரு மின் இணைப்பு வழங்க வரி ரசீது போதுமானது என்றும் அந்த வரி ரசீதிலுள்ள சர்வே எண்ணும் சொத்தின் விற்பனை பத்திரத்திலுள்ள சர்வே எண்ணும் ஒன்றாக இருப்பதினாலும், சர்வே எண்கள் சொத்துக்களின் உரிமை மாறும்பொழுது பிளவு படுவது வழக்கம் என்பதால் கிராம நிர்வாக அலுவலரின் விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்றும் வாதிட்டார்.

10.6 மேலும், வீட்டு வரி ரசீதில் தெருப்பெயர் உள்ளது என்றும் அவ்வாறு தெரிவிக்கப்பட்ட அம்மன் கோவில் தெருவில் திரு. சீத்தாராமன் என்பவருக்கு சொந்தமான வீடு அது ஒன்றுதான் என்பதாலும், அந்த ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று வாதிட்டார்.

10.7 பாகம் பிரிக்கப்படாத இடத்தில் ஒருவர் வீடு கட்டினால் அந்த இடத்தில் உரிமை உள்ள மேல்முறையீட்டாளர் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் தடையுத்தரவு பெற்று வீடுகட்டுவதை தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் மேல்முறையீட்டாளர் ஒரு கட்டி முடிந்த வீட்டிற்கு மின் இணைப்பு வழங்கியது தவறு என்று வாதுரை செய்வது ஏற்புடையது அல்ல என்று வாதிட்டார். மேலும், மின் இணைப்பு தரகூடாது என்று நீதிமன்ற தடையுத்தரவு எதுவும் பெறவில்லை என்பதால் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் வாதுரை புரிந்தார்.

10.8 மேற்கண்ட வீடு, திரு. சீத்தாராமன் மற்றும் அவர் மனைவிக்கு சொந்தமான இடங்களில் உள்ளது என்றும், அவரின் மனைவியின் நிலத்திலுள்ள பகுதியில்தான் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். ஆனால், அதற்கு ஆதாரமாக ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கவில்லை. ஆனால், பஞ்சாயத்து அந்த வீட்டிற்கு வரி விதிப்பை திரு. சீத்தாராமன் பெயரில்தான் கொடுத்துள்ளது. எனவே, மின் இணைப்பு திரு. சீத்தாராமன் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

10.9 வழக்கெழுவினா ஒன்றிற்கான தீர்வின்படி, ஒரு வீட்டிற்கு மின் இணைப்பை வழங்க வேண்டுமெனில் உரிய விண்ணப்ப படிவத்துடன் அந்த வீட்டின் விற்பனை பத்திரத்தின் நகல் அல்லது சொத்து வரி பற்று சீட்டு /தண்ணிர் வரி ரசீது/வடிகால் பற்று சீட்டு ஆகிய ஏதேனும் ஒரு ஆவணம் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று தெரிகிறது.

10.10 இந்த வழக்கில் வெண்பேடு ஊராட்சி வழங்கிய சொத்து வரி ரசீது மற்றும் விற்பனை பத்திர நகல் ஆகிய இரணடு ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஆனால், விண்ணபத்தில் வீட்டின் சர்வே எண்.258/12பி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், மேற்கண்ட ஆவணங்களில் சர்வே எண்.258/12 என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வே எண். வித்தியாசம் இருந்ததால் கிராம நிர்வாக அலுவலரின் சான்றும் பெறப்பட்டுள்ளது. அந்த சான்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"சான்று*

*காஞ்சிபுரம் மாவட்டம் திருப்போரூர் வட்டம், நெ.101, வெண்பேடு கிராமத்தில் கிராம நத்தம் புல எண்.258/12Bல் திரு. சீதாராமன் த/பெ வைரவன் என்பவர் தளம் வீடு சுமார் 0.03 செண்ட் இடத்தில் அமைத்துள்ளார் என சான்று வழங்கப்படுகிறது. மேற்கண்ட வீட்டிற்கான ஊராட்சி வரி இரசீது எண்.52419/19.6.2013 ன்படி வரி செலுத்தி இரசீது இணைத்துள்ளார். சான்று மேற்கண்ட வீட்டிற்கு மின் இணைப்பு பெற வழங்கப்படுகிறது.*

*மேற்கண்ட மனைக்கு நான்கெல்லைகள் விபரம்*

| | | |
|---|---|---|
| *மேற்கில்* | – | *சீதாராமன் மனைவி ஷகீலா நிலம்* |
| *கிழக்கில்* | – | *மோகன் நிலம்* |
| *வடக்கில்* | – | *ஏா பெருங்கால்வாய்* |
| *தெற்கில்* | – | *ஆனந்த நாயக்கர் நிலம்* |

*ஒப்பம் /கிராம நிர்வாக அலுவலர்*
*101 வெண்பேடு, 117, காட்டூர்*
*திருப்போரூர் தாலுகா"*

10.11 மேற்கண்ட சான்றின்படி வெண்பேடு கிராமத்தின் ஊராட்சி வரி ரசீது எண்52419/19.6.2013ன்படி வரி விதிக்கப்பட்டுள்ள வீடு இருக்கும்இடம், சர்வே எண். 258/12பி என்பதும், அது திரு. சீதாராமன் த/பெ வைரவன் அவர்களால் அமைக்கப்பட்டது என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது. மேலும், விற்பனை பத்திரத்திலுள்ள நான்கு மாலும், கிராம நிர்வாக அலுவலரின் சான்றிலுள்ள நான்கு மாலும் ஒரே மாதிரியாகத்தான் உள்ளன. எனவே, உரிய ஆவணங்கள் பெற்றுதான் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்று தீர்வு செய்கிறேன்.

10.12 ஒரு நிலம், பிளவுபட்டு விற்பனை செய்யும்பொழுது சர்வே எண் மாறுவது இயற்கை என்பதும் சர்வே எண். வருவாய் துறையினரால் தான் சரியாக அடையளம்காட்ட முடியும் என்ற எதிர்மனுதாரரின் வாதம் எனக்கு ஏற்புடையதாக உள்ளது. மேலும், விதிகளில் எந்த ஆவணங்கள் பெறப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும், அவ்வாறு கொடுக்கப்படும் ஆவணங்களில் ஏதேனும் விளக்கம் (clarification) தேவைப்படும்பொழுது உரிமம்தாரர் தகுதி வாய்ந்த சம்பந்தப்பட்ட அரசு அலுவலகத்தின் விளக்கத்தை ஏற்றுக்கொள்வதில் தவறில்லை என்றும் நான் கருதுகிறேன். எனவே, சர்வே எண்ணில் மாற்றம் உள்ள பொழுது உரிய வருவாய்த் துறை அலுவலரிடம் விளக்கம்பெற்று பின்பு இணைப்பு வழங்கியுள்ளதால் அதை தவறு என்று கருதமுடியாது. மேலும், எதிர்மனுதாரர் மின் இணைப்பு கோரிய திரு. சீத்தாராமனிடம் பிற்காலத்தில் ஆட்சேபனை எதுவும் பெறப்பட்டால் மின் இணைப்பை துண்டிக்க சம்மதிக்கிறேன் என்ற ஒப்புதல் கடிதத்தையும் பெற்றுள்ளதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

10.13 இந்த மேல்முறையீட்டாளர் கூட்டுப்பட்டா உள்ள இடத்தில் பாகப்பிரிவினை செய்யப்படாத இடத்தில் வீடு கட்டப்பட்டுள்ளதால் அந்த விற்பனை பத்திரம் செல்லத்தக்கது அல்ல மற்றும் கூட்டுப்பட்டா உரிமையாளரிடம் தடையில்லா சான்று பெறவில்லை என்றும் வாதிட்டுள்ளார். மேற்கண்ட வீட்டிற்கு மின்இணைப்பை பெற்றவரின் விற்பனை பத்திரம் செல்லுமா கூட்டு உரிமை உள்ள இடத்தில் பாகம் பிரிக்கப்படாத சொத்தை பங்குதாரரில் ஒருவர் ஒரு பகுதியை குறிப்பிட்டு விற்பனை செய்வது சட்டப்படி சரியா என்பதை முடிவுசெய்ய ஒரு தகுதி வாய்ந்த நீதிமன்றத்திற்குதான் அதிகாரம் உண்டு. மின்குறைதீர்ப்பாளருக்கு அந்த அதிகாரம் இல்லை.

10.14 2003ஆம் ஆண்டு மின்சார சட்டத்தின்படி 43வது பிரிவின்படி உரிமையாளர் (owner) மற்றும் குடியிருப்பவர்(occupier) எவரும் மின்இணைப்பை பெற தகுதியானவர் ஆவர்.

10.15 என் முன்னால் உள்ள இந்த வழக்கில் திரு. சீத்தாராமன் என்பவர் பெயரில் ஒரு வீடு உள்ளது. அந்த வீட்டில் யாரும் குடியிருக்கவில்லை என்றோ அங்கு அது போன்ற வீடு இல்லை என்றோ இந்த மேல்முறையீட்டளார் வாதடவில்லை. ஆனால், அந்த வீடு கட்டியிருக்கும் இடம்

ஒரு பிரிக்கப்படாத பாகம் என்றுதான் வாதிட்டுள்ளார். மேலும், பாகம் பிரிக்கப்படாத இடத்திலுள்ள வீடு என்பதால் அதற்கு மின் இணைப்பு வழங்க கூடாது என்ற நீதிமன்ற தடை உத்தரவும் இல்லை. எனவே, பத்தி எண்.10.11 மற்றும் 10.12இல் கூறியபடி மேற்கண்ட மின்இணைப்பை எதிர்மனுதாரர் உரிய ஆவணங்கள் பெற்று வழங்கியுள்ளதால் மின் இணைப்பு வழங்கியது தவறு என்று கூறமுடியாது என்று நான் கருதுகிறேன்.

10.16 2003ஆம் ஆண்டு மின்சார சட்டத்தில் ஒரு மின் இணைப்பை எத்தகைய சூழ்நிலையில் துண்டிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது அவைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(அ) பிரிவு 47(1)ன்படி மின்நுகர்வோர் பிணையத்தொகையை (seucirty deposit) செலுத்த தவறினால் பிரிவு 47(3)ன்படி மின்துண்டிப்பு செய்யலாம்.

(ஆ) மின் உரிமம்தாரருக்கு செலுத்தப்படவேண்டிய மின்கட்டணம் மற்றும் மின்கட்டணத்தை தவிர மற்ற கட்டணம் ஆகியவற்றை செலுத்த தவறினால் பிரிவு 56(1)இன்படி மின்துண்டிப்பு செய்யலாம்.

(இ) பிரிவு 135(1A)ன்படி மின்திருட்டு ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டால் மின்துண்டிப்பு செய்யலாம்.

(ஈ) பிரிவு 163(3)ன்படி மின்நுகர்வோர் குடியிருக்கும் வளாகம் எதையும் பார்வையிடுவதற்காக நுழைவு செய்யும் உரிமையை மின் உரிமைதாரரின் அலுவலருக்கு மின் நுகர்வோர் மறுத்தால் மின் துண்டிப்பு செய்யலாம்.

10.17 இந்த மேல்முறையீட்டாளர் திரு. சீத்தாராமன் அவர்களுக்கு வழங்கப்பட்ட மின் இணைப்பு எண்.572–008–929ஐ மின் துண்டிப்பு செய்ய கோரும் காரணங்கள் மேலே கூறிய காரணங்களாக இல்லை.

10.18 இந்த வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள மின் இணைப்பு எண்.572–008–929 என்ற மின் இணைப்பு வழங்கப்பட்ட இடம் ஒரு வீடு என்பதிலும் அந்த வீட்டின் உரிமையாளர் திரு. சீத்தாராமன் அவர்கள் என்பதிலும் எந்த கருத்து வேறுபாடும் இல்லை. வீடு கட்டிய இடம்தான் பாகம் பிரிக்கப்படாத நிலம் என்றும் கூட்டு பட்ட உள்ள இடம் என்றும் அவரது மனைவிக்கும் சொந்தம் என்றும் வாதாடப்பட்டுள்ளது. ஆனால், வீட்டின் உரிமையாளர் என்பதற்கு மின்பகிர்மான விதி27(3)ல் கூறியுள்ளபடி ஊராட்சி மன்றம் வழங்கிய வீட்டு வரி ரசீது சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாலும் வீட்டு வரி ரசீதிலுள்ள சர்வே எண்.258/12 என்று தெரிவித்துள்ள போதும், அதன் உண்மையான சர்வே எண்.258/12பி என்று கிராம நிர்வாக அலுவலர் வீட்டு வரி ரசீது நம்பரை சுட்டிக்காட்டி சான்று வழங்கியுள்ளதாலும் மேல்முறையீட்டாளர் மேற்கண்ட மின்இணைப்பு துண்டிக்க கோரும் காரணங்கள் மேலே பத்தி எண்.10.16ல் கூறப்பட்டுள்ள காரணங்களாக இல்லை என்பதாலும் ஒரு வீட்டிற்கு மின்சாரம் என்பது அடிப்படை உரிமை

என்பதாலும் மின் இணைப்பு எண்.572–008–929ஐ மின்துண்டிப்பு செய்ய முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

10.19 மேல்முறையீட்டாளர், குறிப்பிட்டுள்ள திரு. ரத்தினம், திரு. தாமோதரன் மற்றும் திரு. மோகன் அவர்களுக்கு வழங்கிய மின் இணைப்புகள் பற்றி ஏற்கனவே மேல்முறையீட்டு மனு எண்.32/2012ல் தீர்வு வழங்கப்பட்டுவிட்டது என்பதால் அது முடிந்து போன விஷயம் (settled issue). எனவே, மீண்டும் விவாதிக்க வேண்டியதில்லை.

11. <u>முடிவுரை</u>

11.1 மேற்கண்ட பத்தி எண்.10.18டிலுள்ள தீர்வின்படி செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வில் மின்குறைதீர்ப்பாளரால் மாற்றம் எதுவும் செய்ய முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

11.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 31/2015 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

<u>பெறுநர் :</u>

திரு. அர. ஏழுமலை,
த/பெ அ. ரங்கசாமி,
கன்னியம்மன் கோயில் தெரு,
மேட்டுக்காடு,
சட்டமங்கலம் கிராமம்,
மறைமலை நகர், காஞ்சிபுரம் மாவட்டம்.

2) மேற்பார்வை பொறியாளர்,
செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
130, ஜி.எஸ்.டி ரோடு,(புதிய பேருந்து நிலையம் அருகில்)
செங்கல்பட்டு – 603 001

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
130, ஜி.எஸ்.டி ரோடு,(புதிய பேருந்து நிலையம் அருகில்)
செங்கல்பட்டு – 603 001

4) தலைவர்  மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5)  செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி  லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6)  உதவி இயக்குநர் (கணினி)  –   மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி  லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.